கூட்டி, அந்த தொழிலாளர்களின் தலைவராக விளங்கிய தியாகியை மதிக்கிற வாய்ப்பை என்னுடைய தொகுதிக்குப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த ஆளுநர் உரை மீது நன்றி சொல்லிப் பேசுகின்ற வாய்ப்பு தந்திருக்கக்கூடிய பேரவைத் துணைத்தலைவர் அவர்களுக்கும் உளமாரந்த நன்றியைச் சொல்லி விடை பெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு அதிக நேரம் வேண்டும். இப்போது இரண்டு மணியாகி விட்டது. நாளைக்குப் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது. பேரவை, மீண்டும் நாளை காலை (6—2—1992) 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.01 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

54. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1989-90-ஆம் ஆண்டிற்கான நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956] 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] [தமிழ், ஆங்கிலம்.]

55. தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் 1987—88ஆம் ஆண்டிற்கான இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

56. தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் 1988—89ஆம் ஆண்டிற்கான இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

[1992 பிப்ரவரி 5

57. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1990–91ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

20. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை, 1991–92.

21. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கை 1991–92.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS